### காலிங்கராயன் கால்வாயை

# பாசனத்துக்கு அர்ப்பணித்த 732-ம் ஆண்டு நிறைவு விழா

## நாளை நடக்கிறது

ஈரோடு, ஜன. 17–

ஈரோடு மாவட்டத்தின் விவசாய வளர்ச்சிக்காக 56½ மைல் நீளம் வாய்க்கால் வெட்டியவர் காலிங்க ராயன். இவர் காலிங்கராயன் அணை மற்றும் வாய்க்கால் கட்டும் பணியை கி.பி. 1281 தை மாதம் 5–ம் நாள் நிறைவு செய்தார்.

**நிறைவு விழா**

இதனை நினைவு கூறும் வகையில் ஈரோடு கொங்கு ஆய்வு மையம் சார்பில் காலிங்கராயன் கால்வாய் பாசனத்துக்கு அர்ப்பணிக்கப்பட்ட 732–ம் ஆண்டு நிறைவு விழா வெள்ளோடு காலிங்கராயன் சதுக்கத்தில் நாளை (18–ந் தேதி) காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

காலிங்கராயன் அறக்கட்டளை கவுரவ தலைவர் புலவர் செ.ராசு தலைமை தாங்குகிறார். கே.சின்னுசாமி கவுண்டர், கொளந்தவேல், சத்தியபாமா, சின்னச்சாமி உள்பட பலர் முன்னிலை வகிக்கிறார்கள். கண்ணுசாமி வரவேற்று பேசுகிறார்.

தட்சிணாமூர்த்தி காலிங்க ராயன் கால்வாய் கட்டப்பட்டது குறித்து அறிமுகவுரை ஆற்றுகிறார்.

**கலெக்டர்**

இந்த விழாவில் மாவட்ட கலெக்டர் சண்முகம், எம்.எல்.ஏ.க்கள் கிட்டசாமி, நடராஜ் மற்றும் வேலாயுதம், கருப்புசாமி உள்பட பலர் கலந்து கொள்கிறார்கள். முடிவில் கொற்றவேல் நன்றி கூறுகிறார்.